1980 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பெயர் அக்கல்லூரிக்கு வைத்து ரொம்பக் காலம் ஆயிற்று. அது எல்லாம் வேண்டாம்.

நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

கு.கா.வி. எண் 37—**திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப்பணி என்ன நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்ட ஆய்வுப் பணிகள் சமீபத்தில் முடிவுற்று இத் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) உத்தேச மதிப்பீட்டின் மீது அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்றபின் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு எவ்வளவு? அதை இந்த வாரியம் எப்போது முடிவுசெய்து அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நாகர்கோவில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு உத்தேச மதிப்பீடு 9 கோடி ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு பரிசிலனையில் உள்ளது. உத்தேச மதிப்பீடு ஆகஸ்டு மாத இறுதிக்குள் முடிவு செய்யப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, ஆக்கப்பூர்வமான பணிகளை வேகமாக நடத்தும் இந்த அரசின் நிர்வாகம் எப்போது ஒப்புதல் வழங்கும்? அந்தக் கழிவு நீர் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நகரின் நில மட்ட அளவுக்கு இந்நகரின் பல்வேறு பகுதிகள் பிரிக்கப்பட்டு கழிவு நீர் எல்லாம் ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டு, நகரத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆசாரி பள்ளம் என்ற இடத்திற்கு அருகில் உள்ள கழிவுநீர் பகுதிக்கு உந்தப்படும் பின்னர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் பயிர் செய்யப் பயன்படுத்தப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 9.30)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாக்கடைத் திட்டத்திற்கு அரசாங்கம் ஏற்கனவே மானியம் கொடுத்து வந்தது. அது இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டதாகத் தெரிகிறதே, அது உண்மையா? அப்படி நிறுத்தப்பட்டிருக்குமானால் அதை மீண்டும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: பேரவைத் தலைவரவர்களே, பெருகிவரும் மக்கள் தொகைக்கும், நகரத்திற்கும் ஏற்ப பெருநகரங்கள் அனைத்திற்கும் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிநீருக்கு இப்பொழுது முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். பொருளாதார நிலைமைக்கேற்ப, பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று அனுமதித்து, ஆய்வு செய்து, செயல்படுத்த முடியும் என்று அரசு முடிவுக்கு வந்தால் அங்கே பாதாள சாக்கடை செயல்படுத்தப்படும்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அனுமதி கொடுக்கும்பொழுது ஜனத்தொகையைக் கணக்கிட்டு அனுமதிக்கப்படுகிறதா அல்லது பண வருவாயைப் பொறுத்து அனுமதி கொடுக்கப்படுகிறதா? எந்தக் கொள்கையின் அடிப்படையில் அனுமதிக்கப்படுகிறது? திண்டுக்கல் இப்பொழுது உள்ள திட்டத்தில் இணைக்கப்படவில்லையே? இந்த ஆண்டு எந்தெந்த நகரங்களில் இந்தத் திட்டம் நடத்தப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே மக்கள் தொகை எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்த நகராட்சியினுடைய கொடுக்கும் சக்தியும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது; மக்கள் தொகையை எடுத்துக்கொள்வதன் மூலமாக ஒவ்வொருவருக்கும் எவ்வளவு லிட்டர் கழிவு நீர் வீதம் கணக்கிடப்படும் என்பதற்கெல்லாம் உதவியாகிறது. எந்தெந்த இடத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.